1979 நவம்பர் 7]

கோட்டூரில் புதிய மருத்துவமனை.

*வினா எண். 136—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் கோட்டூர் வட்டாரத்தின் தலைமையிடமான கோட்டூரில் மருத்துவமனை ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): கோட்டூரிலிருந்து 3 கி.மீ. தொலைவில் ஆதிச்சபுர கிராமத்தில் இரு மருத்துவ அலுவலர்களைக் கொண்டு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இது தவிர, கோட்டூரைச் சுற்றி முறைப்படுத்தப்பட்ட சித்த மருந்தகங்களும், அரசு மான்யம் பெறும் ஊராக மருந்தகங்களும் இயங்கி வருகின்றன. எனவே அரசு விதிமுறைப்படி கோட்டூரில் புதிய மருத்துவமனை ஏற்படுத்த வாய்ப்பில்லை. எனினும், ஊராட்சி ஒன்றியமும், பொதுமக்களும் நன்கொடை அளிக்கவும், நிலம், தகுந்த கட்டிடம் அளிக்கவும் முன்வந்தால் புதிய மருந்தகம் திறப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

திரு. பொ. உத்திராபதி: ஆதிச்சபுரத்தில் ஒரு மருத்துவ மனை இருப்பது உண்மைதான். இருந்தாலும், கோட்டூர் பகுதி ஏழை எளிய மக்கள், ஹரிஜன மக்கள் அதிகமாக வாழக்கூடிய ஒரு பகுதி. செயலர் அவர்கள் சொல்கிற அளவிற்கு இடமும், மக்களுடைய பங்குத் தொகையும் தர நாங்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கிறோம். செயலர் அவர்கள் வாக்குறுதிப்படி அங்கே ஒரு மருத்துவ மனையைத் துரிதமாக ஏற்படுத்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தண்டையார்பேட்டை தொத்துநோய் மருத்துவமனை.

*வினா எண் 137—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டையார்பேட்டையில் உள்ள தொத்து நோய் மருத்துவ விடுதியை வேறு இடத்திற்கு மாற்றி விரிவு படுத்தும் திட்டம் சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்படவிருக்கிறதா ?